## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

**O.S. No.**150/2018

2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 19 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 19.11.2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பரமேஸ்வரி | ஜாதி | : | |
| க/பெயர் | : | புலவேந்திரன் | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கடந்த 2011ல் கிரையம் பெற்ற வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு முந்தைய மூல ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் வங்கியில் கடன் பெற்றதால் அங்குள்ளது. எனக்கு கிரையம் செய்து கொடுத்த எனது முந்தைய உரிமையாளருக்கு என்ன உரிமை இருந்ததோ அதே உரிமை தான் எனக்கும் உள்ளது என்றால் சரிதான். எனது முந்தைய உரிமையாளர் முந்தைய ஆவணங்களில் வாய்க்காலை பயன்படுத்தி வந்ததாக சொல்லியுள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

2) எனது வா.சா.ஆ.3 ஆவணத்தில் கூட்டு பட்டா உள்ளதாக சொல்லியுள்ள நிலையில் யார், யாருடைய பெயரில் உள்ளது என்றால்? எனது நிலத்திற்கு பக்கத்து நிலத்திலுள்ள தர்மதுரை மற்றும் பாஸ்கர் ஆகியோர்களின் பெயரிலுள்ளது. கூட்டு பட்டாவிலுள்ள சர்வே எண் எதன்அடிப்படையில் எனக்கு தனி பட்டா கிடைத்தது என்றால் உட்பிரிவு செய்யப்பட்டதன் அடிப்படையில் எனக்கு தனி பட்டாவாக கிடைத்தது.

3) புல எண்.457/9 என்பது என்ன உட்பிரிவாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் அதை என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது. தர்மதுரை மற்றம் பாஸ்கர் ஆகியோர்கள் பெயரில் கூட்டு பட்டாவாக இருந்த ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புல எண்.457/10 கூட்டு பட்டாவாக யார் பெயரிலுள்ளது என்பதாக வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது. கூட்டு பட்டா மணியன் வகையறா பெயரிலுள்ளது. குறிப்பாக யார், யார் பெயரிலுள்ளது என்றால் ரவி என்ற பெயர் ஞாபகமிலுள்ளது. மற்ற 3

நபர்களின் பெயர் ஞாபகமில்லை. புல எண்.457/10லுள்ள மற்ற கூட்டு உரிமையாளர்களை இந்த வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

4) கடந்த 2011–ல் கிரையம் பெற்றதற்கு பின்னிட்டு எனது பெயரில் பட்டா மாற்றம் செய்தற்குண்டான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் முதன் முதலாக பிரதிவாதிகள் எந்த தேதி, மாதம் பிரச்சனை செய்தார்கள் என்றால் கடந்த 2018ல் பிரச்சனை செய்தார்கள். எனக்கு சொந்தமான சொத்திற்கு பக்கத்திலேயே பிரதிவாதிகள் குடியிருந்து வருகிறார்கள். 3 பிரதிவாதிகளிடமும் போர்செட் வசதியுள்ளது.அதற்குண்டான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. உண்மையாக எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே வாய்க்கால் பாசனம் தொடர்பாகத்தான் பிரச்சனை என்றால் சரிதான்.

5) பிரதிவாதிகள் வாய்க்கால் பாசனம் வேண்டும் என்று கேட்கிறார்கள் என்றாலும், நான் கொடுக்கமுடியாது என்று மறுத்து வருகிறேன் என்றால் சரிதான். வாய்க்கால் அமைப்பு குறித்து நேரிடையாக வந்து பார்வையிட்டால் தெரியவரும் என்றால் சரிதான். பாசன வாய்க்காலை தடுப்பதற்கு நான் சட்டப்படி தடைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பல ஆண்டுகளாக பயன்படுத்தி வரும் பாசன வாய்க்காலை தடுப்பதற்கு எனக்கு உரிமை இல்லை என்றாலும், அது பிரதிவாதிகளின் வாழ்வாதாரத்தை சார்ந்தது என்று சொன்னால் சரியல்ல. நான் பிரதிவாதிகளுக்கு எதிராக கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

6) நான் உண்மையான விவரங்களை மறைத்து பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.11.20 18:28:31 +0530

District Munsif
Mannargudi.